மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.1/2024</u>

2026ம் ஆண்டு ஜுலை 02ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வீரப்பன் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>02.07.2026 வா.சா.1 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கிற்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 16.07.2003 தேதியிட்ட மணி பெயரில் உள்ள ஏ செட்யூல் சொத்திற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.1
2. 04.10.2004 தேதியிட்ட வாதி பெயரிலான 1ம் ஏ செட்யூல் சொத்திற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.2
3. 22.01.2021 தேதியிட்ட 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து பி செட்யூல் சொத்தை இளங்கோவன் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.3
4. 17.02.2016 தேதியிட்ட இளங்கோவின் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.4
5. 10.02.2021 தேதியிட்ட 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள பி செட்யூல் சொத்திற்கான கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.5

6. 10.02.2021 தேதியிட்ட வாதி மற்றும் 4ம் பிரதிவாதியும் பி செட்யூல் சொத்தினை பொறுத்து ஏற்படுத்தி கொண்ட தட பாத்திய உடன்படிக்கை பத்திரம் சான்றிட்ட நகல் –வா.சா.ஆ.6

7. 10.12.2023 தேதியிட்ட ரீ.ச.எண்.371/1பி க்கான சிட்டா கணினி நகல் –வா.சா.ஆ.7

8. 13.11.2023 ரீ.ச.எண்.373ன் புல வரைபடம் கணினி நகல் – வா.சா.ஆ.8

9. 31.12.2023 தேதியிட்ட ரீ.ச.எண்.372க்கான சிட்டா கணினி நகல் – வா.சா.ஆ.9

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.07.02 19:45:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.